
T 4508
149
OFFICE OF THE CURATOR
RECEIVED
20 ... 1977
ORIENTAL MANUSCRIPTS LIBRARY



# தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



12

1977—ஏப்பிரல்

# வளரும் இந்தியப் பொருளாதாரம்

பொருளாதார வளர்ச்சியில் இந்தியா பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. பணவீக்கம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது; விலைவாசி ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது.

- 118 மில்லியன் டன் உணவு உற்பத்தி செய்து புதிய சாதனை செய்யப்பட்டுள்ளது: தற்போது 18 மில்லியன் டன்னுக்கும் அதிகமான உணவு தானியம் கையிருப் பிலுள்ளது.
- நடப்பு நிதியாண்டின் முதல் 6 மாதங்களில் தொழில் வளர்ச்சி 12 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. கடந்த ஆண்டு, இதே காலத்தில் இந்த வளர்ச்சி 3 சத விகிதமே. 1976—77ல் மொத்த தொழில் உற்பத்தி கடந்த ஆண்டைவிட கிட்டத்தட்ட 10 சதவிகிதம் அதிகமாக இருக்கும்.
- மின் சக்தி உற்பத்தி, 1976 ஏப்ரல் - செப்டம்பரில், 1975-ன் இதே காலத்தில் இருந்ததைவிட 16·4 சத விகிதம் அதிகரித்தது.
- 1976 ஏப்ரல் - அக்டோபரில் இந்திய ஏற்றுமதி 33·9 சதவிகிதம் அதிகரித்து முன்னணியில் நின்றது. இதே காலத்தில் இறக்குமதி 9 சதவிகிதம் குறைந்திருந்தது.
- அந்நிய செலவாணி நிலுவை கணிசமாக உயர்ந் துள்ளது. சுதந்திரத்திற்குப் பின் முதல் முறையாக அந்நியச் செலாவணி இருப்பு ரூ. 25,000 இலக்கைத் தாண்டியுள்ளது.
- அரசுத் துறை நிறுவனங்களின் உற்பத்தி வேகம் சுமார் 12 சதவிகிதம் கூடியுள்ளது.
- ரூபாயின் வாங்கும் சக்தியும் 17லிருந்து 21 சதவிகிதம் வரை அதிகரித்துள்ளது.

உறுதி கொண்ட பாரதத்தின் அரசும் மக்களும் முழு வளர்ச்சியடையத் துடிப்பாய் இருப்பதையே இந்தச் சாதனைகள் உணர்த்துகின்றன.

 DAVP 76/864

# சின்னமனூர்

தொகுப்பாசிரியர்
வே. தில்லைநாயகம் எம்.ஏ.
பொது நூலக இயக்குநர்

தேனோலை
பன்னிரண்டாம் இதழ்
1977 ஏப்பிரல்

பதிப்பாசிரியர்
கொடுமுடி சண்முகப் பிரகதம்

**தேனோலை**

வெளியீட்டாளர்

கொடுமுடி, சண்முகப் பிரகதம்,
54-ஏ, வேலூர்ச் சாலை,
திருச்செங்கோடு-637211

விலை. ரூ. 1-00
ஆண்டுக் கட்டணம் ரூ. 4-00

## தமிழ் எழுத்துச் சீர்மைகள்

1. உகர, ஊகார மெய்களுக்கு பக்கக்குறி இடுதல் (ஜுரம், ஜூலை)
2. உயிர்நெடில்களுக்குக் கால் வாங்குதல்

செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே
எங்கள் தந்தையர் நாடெனும் பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே

அச்சிட்டவர் :

நாரா. நாச்சியப்பன்

நாவல் ஆர்ட் பிரிண்ட்ர்ஸ்

சென்னை-600014.

# சின்னமனூர்

## வே. தில்லைநாயகம் எம். ஏ.

### *அறிமுகம்*

ஐந்து இலட்சம் ரூபாய்கள் வரவு செலவு கொண்ட பஞ்சாயத்து, பத்தாயிரம் ஏக்கர்களுக்கும் மேற்பட்ட நன்செய் புன்செய் நிலங்கள் இருபதினாயிரம் மக்கள், ஐயாயிரத்தை எட்டும் இல்லங்கள், மூவாயிரம் மாணவர்கள், நானூறு தெரு விளக்குகள், முந்நூற்றியிரண்டு கடைகள். நூற்றி மூன்று ஆசிரியர்கள், ஐம்பது அருந்தகங்கள், இருபது கிணறுகள், பதின் மூன்று பள்ளிகள், ஏழு படிப்பகங்கள், மூன்று பழங்கோயில்கள், இரண்டு சேரிகள், வற்றாத பெரியாறு ஊருக்குக் கிழக்கே மொட்டைக் காடு, தெற்கே கருங்கட்டாங் குளம், மேற்கே பெரி யாறு, வடக்கே செங்குளம், வரலாறறிவிக்கும் செப்பேடுகள்— இதுதான் சின்னமனூர்.

மதுரை மாவட்டத்திலே—கம்பம் பள்ளத்தாக்கிலே—மதுரை போடி இரும்புப் பாதை வழியிலே—தேனியிலிருந்து பதினான்கு மைல் தொலைவிலே மதுரை. குமுளிப்பெரும் பாதையிலே அமைந்து உள்ளது.

சின்னமனூர் என்றதுமே, செந்தமிழ் கற்றோர், செந்தமிழ் நாட்டு வரலாறு படித்தோர் செப்பேடுகள் தந்த...என்பார்களே அந்தச் செப்பேட்டுப் புகழ் சின்னமனூர் வரலாறு நீண்டது. நெடும்புகழ் கொண்டது.

### *வரலாறு*

இக்காலத்தில் சின்னமனூர் என வழங்கும் நற்செய்கை புத்தூருக்கு மந்தர கௌரவமங்கலம் எனப் பெரியரிட்டு அந்தணருக்குப் பிரம தேயமாக வழங்கினான் மூன்றாம் இராசசிம்மபாண்டியன் எனச் சின்னமனூர் செப்பேடுகள் செப்பு கின்றன. அவன் தன் பட்டப் பெயர்களில் ஒன்றான 'மந்தர கௌரவ மேரு' என்ற பெயர் நிலைத்திருக்க இங்ஙனம் செய்

திருக்க வேண்டும். அவன் பாண்டிய நாட்டை கி.பி. 900 முதல் 946 வரை ஆண்டு வந்திருக்கிறன்.

அடுத்து திருஞான சம்பந்த மூர்த்திகளால் சமண சமயத்தி லிருந்து சைவனாக்கப்பட்டவனும், சுந்தர பாண்டியன் கூன் பாண்டியன் எனத் திருவிளையாடற் புராணத்திற் கூறப்பட்ட வனும், சுந்தர மூர்த்திகளால் 'நிறைகொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற, நின்றசீர் நெடுமாறனடியார்' எனத் திருத் தொண்ட தொகையில் புகழப்பட்டவனும், பாண்டியர் ஆட்சியை யாங்கணும் பரப்பிப் புகழ் பெற்றவனுமான மாறவர்மன் அரி கேசரியான் தன் பெயர் விளங்கும் வண்ணம் மந்தர கௌரவ மங்கலம் என்னும் ஊருக்கு அரிகேசரிநல்லூர் என்றொரு பெயரும் வழங்கினான் என்று தெரியவருகிறது.

இதை அரண் செய்வதுபோல சின்னமனூர்த் தலவரலாறும் இவ்வூருக்கு அரிகேசரி நல்லூர் என மற்றொரு பெயருமுண்டு என விதந்தோதுகிறது.

சின்னமநாயக்கனூர் என்ற பெயரின் மரூஉ மொழிதான் சின்னமனூர். பாளையப்பட்டுள் ஒருவனாகிய சின்னம நாயக்கன் பெயரால் இவ்வூர் நிலவுகிறது. இச் செய்தி இவ்வூரை அடுத்துள்ள உத்தமபாளையம் ஞானம்மன் கோவிலிலுள்ள ஒரு திரிசூலக கல்லில் சின்னம நாயக்கனூர் என குறிப்பிடும் முகத் தான் உறுதி பெறுகிறது. இப் பெயர் மாற்றம் பாண்டியர் வீழ்ச்சிக்குப் பின் நாயக்கர்கள் ஆட்சி தோன்றிய 17ம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

## சின்னமனூர் செப்பேடுகளில் குறிக்கப்பட்ட அரசர்களின் வரலாறு

### *தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்*

இவன் கடைச் சங்க காலத்தில் வாழ்ந்தவன். இளமையி லேயே அரசுக் கட்டில் ஏறினான். இவன் ஆட்சி புரிந்து வரும் நாளில் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், சேர மான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் எனும் வேளிர் ஐவரையும் துணையாகக் கொண்டு பாண்டி நாட்டைக் கைப்பற்றும் எண்ணத்தால் மதுரையை முற்றுகையிட்டனர். இஃதறிந்த நெருஞ்செழியன் பெருஞ் சினங் கொண்டு பொருது எழுவரையும் புறங்காட்டச் செய்து

தலையானங்கானத்தில் மறித்துப் பெரும்போர் நடத்திக் கொன்றான். இச்செய்தி தலையானங்கானத்திற் றன்னொக்கு மிருவேந்தரைக் கொலை வாளிற்றலை துமித்து' என கூறப் படுகிறது.

*இரண்டாம் இராசசிம்ம பாண்டியன்*

இவன் செப்பேடுகளை முதன் முதல் தோற்றுவித்தவனும், பரம வைணவன் என்ற பட்டம் பெற்றவனும், ஆய்வேலை வென்ற வனுமான நெடுஞ்சடையன் பராந்தகனின் மகன். இவன் பெயரை மட்டும் சின்னமனூர் செப்பேடுகள் செப்புகின்றனவே யன்றி செய்தியேதும் விளக்கமா யில்லை. எனவே இவன் ஆட்சி காலம் மிகச் சுருக்கமாயிருத்தல் வேண்டும். இவன் கி.பி. 790 முதல் 792 வரை அரசாண்டான் என்பது சில ஏதுக் களால் உணரக் கிடக்கின்றது.

*வரகுண மகாராசன்*

இவன் இரண்டாம் இராசசிம்ம பாண்டியனின் மகன். இவனது 41, 42, 44-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், தளபதி சமுத்திரம், கழுகுமலை, ஏர்வாடி முதலிய ஊர்களில் காணப்படுகின்றன. எனவே கி.பி. 792 முதல் 835 வரை அரசாண்டான் எனத் தெரிகிறது.

இவனை 'கொற்றவர்கள் தொழு கழற்காற் கோவரகுண மகாராசன்' என சின்னமனூர் செப்பேடுகள் புகழ்கின்றன.

இவனது கல்வெட்டுகள் சோழநாடு முழுவதும் காணப்படு வதால் சோழ மண்டலம் முழுதும் இவனது ஆட்சிக்குட்பட் டிருந்தது எனப் புலனாகிறது.

இவன் சிவபக்தனாக இருந்திருக்கின்றான். மணிவாசகர் இவனை 'வரகுணனாந் தென்னவனேத்து சிற்றம்பலத்தான்' என்று புகழ்கிறார். பட்டினத்தடிகள் தமது திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் 'பெரிய அன்பின் வரகுண தேவர்' என்று ஏத்துகிறார். நம்பியாண்டார் நம்பி, தாம் பாடிய கோயிற்றிருப் பண்ணியார் திருவிருத்தத்தில் பொடியேர் தரு மேனியனாகிப் பூசல் புகலடிக்கே—கடிசேர் கணை குளிப்பக் கண்டு கொயிற் கருவியில்லார் | அடிபடவமையும் கணைவென்ற வரகுணன் றன்—முடியே தருகழலம் பலத்தாடி தன் மொய்கழலே' என வாழ்த்துகிறார்.

### *சீமாறன் சீவல்லபன் பரச்சக்கர கோலாகலன்*

இவன் வரகுண மகாராசனின் மகன். இவன் குன்னூர், சிங்களம், விழிஞம் என்னுமிடங்களில், போர் நிகழ்த்தி வாகை சூடினான். குடமூக்கில் (கும்பகோணம்) வந்தெதிர்ந்த கங்கர், பல்லவர், சோழர், கலிங்கர், யாகதர் ஆகியவர்களை ஆற்றலோடு வென்றான் என சின்னமனூர் செப்பேடுகள் செய்திகள் பேசுகின்றன. மகாவம்சம் என்ற சிங்கள வரலாற்று நூலும் ஈழ மன்னன் முதலாம் சேனனுடன் சீமாறன் சீவல்லபன் போரிட்டு இலங்கையைக் கைப்பற்றினான் எனக் கூறுவது மேற்கண்ட செய்தியை வலியுறுத்துவதாகும்.

### *வரகுணவர்மன்*

இவன் சீமாறன் சீவல்லபன் பரச்சக்கர கோலாலனின் மகன். இவனை '*குரை கழற் காலரை சிறைஞ்சக் குவலயந்தன தாக்கின-வரைபுரையு மணி நெடுந்தோள் மன்னர் கோன் வரகுணவர்மன்* என்று சின்னமனூர் செப்பேடுகள் பேசுகின்றன. பாண்டியருக்கும் பல்லவர்க்கும் நடந்து வந்த போர்கள் இவன் ஆட்சி காலத்தில்தான் ஒருவாறு முடிவுற்றன எனலாம்.

### *சடையவர்மன் பராந்தக பாண்டியன்*

இவன் வரகுணவர்மனின் மகன். இவன் கி.பி. 880ல் அரியணை ஏறியிருத்தல் வேண்டும். இவன் கரகிரியில் உக்கிரனைப் போரில் வென்று, அவனையும் அவன் களிற்றினங் களையும் கைப்பற்றினான்; பெண்ணாகட நகரை அழித்தான்; கொங்கர்களை வென்றான்; பலதேவஸ்தானங்களும், பிரம தெயங்களும், பள்ளிச் சந்தங்களும் தந்து புகழெய்தினான் என்று சின்னமனூர் செப்பேடுகள் கூறுகின்றன.

### *மூன்றாம் இராசசிம்ம பாண்டியன்*

இவன் சடையவர்மன் பராந்தக பாண்டியனின் மகன். சின்னமனூர் செப்பேடுகளைத் தோற்றுவித்தவன். சடையன், மாறன், இராசசிகாமணி, சீகாந்தன், சுந்தர கௌரவமேரு முதலான பட்டங்களைக் கொண்டவன். உவப்பிலி மங்கலத்தில் தன்னை யெதிர்த்த பகைவர்களை வென்றான். கொடும்பாளூர் மன்னன் பெரும் படையைப் புறங்காட்டி ஓடச் செய்தான். வஞ்சிமாநகரில் பெரும் போர் புரிந்தான். முதற் பராந்தக சோழனை வெள்ளூரிலும் நாவற்பதியிலும் தோல்வியுறச் செய்தான்; எண்ணிறந்த பிரமதேயமும், தேவதானமும்; பள்ளிச்

சந்தமும் தம்தான் என்று சின்னமனூர் செப்பேடுகள் செப்பு கின்றன.

இச் செப்பேட்டில், 'வரிசையில் மாக்கயல் புலிசிலை, வட வரை நெற்றியில் வரைந்துந்—தடம் பூதம் பணிகொண்டு தடாகங்கள் பலதிருத்தியும்—அடும்பசி நோய் நாடகற்றி—அம் பொற் சத்திரமுயர்த்தும்' என்று கூறப்படுகிறது. இதனால் தமிழரசர்கள் வடநாட்டு அரசர்களை வென்று இமயமலையில் தமிழரசர்களது இலச்சினையாகிய மீன், வில், புலி முதலியவற்றை பொறித்தனர் எனத்தெரிகிறது. நாட்டில் வளப்பம் மிகு முறையில் கால்வாய்களும், குளங்களும் தொட்டனர் என்றும் ஊர்கள் தோறும் வழிப் போவாருக்கு பசி நீக்குவான் பொருட்டு அன்னச் சத்திரங்கள் நிறுவியிருந்தனர் என்றும் தெரியவருகிறது.

இதுகாறும் சின்னமனூர் செப்பேடுகளில் குறிக்கப் பெற்ற வரலாறுகளை கண்டோம், தொடுத்து இவ்வூரிலுள்ள சிவகாமி யம்மன் கோவில், பெருமாள் கோவில் கல்வெட்டுச் செய்தி களையும் காண்போம்.

இக்காலத்தில் சிவகாமியம்மன் கோவில் என்று வழங்கப்படும் கோவிலின் ஆதிப் பெயர் 'திருப்பூலாந்துறை' என்பர். இத் தலத்தின் தலபூம் 'முட்பூலா' ஆதலால் இப்பெயர் வந்தது. இதனுள் இருக்கும் இறைவரின் பெயர் 'உடையார் திருப்பூலாந் துறை நாயனார்' என்பதாகும்.

மாறவர்மன் குலசேகர தேவரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இக் கோயிலின் நான்கு மாலாக கிழக்கே குளமும், தெற்கே தேங்கம் திருவீதியும் என்று கூறப்படுகிறது. இதனால் வடக்கே நன்செய் நிலங்களும் மேற்கே ஊரும் இருந்ததாக எண்ண இடமிருக்கிறது.

மூன்றாம் இராசசிம்ம பாண்டியன் செப்பேட்டிலும் 'இராச சிங்கப் பெருங்குளம் கீழ்ச் சூழு நகரிருந்தருளி' என்று கூறு வதால் குளத்திற்கு கீழ் ஊரும் கோவிலும் இருந்தன எனத் தெரிகிறது. இக் குளம் முன் இராச சிங்கப் பெருங்குளம் என்றும் உடையார் குளம் என்றும் பெயர் பெற்றிருக்கிறது.

இக் கோவிலின் தென்மேற்கில் நத்தத்துமேடு என்னும் ஒரு மேடு வழங்கப்படுகிறது. அங்கு அகழ்ந்து பார்க்கையில் மக்கள் வசித்த சின்னங்கள் புலனாதலாலும், 'சீவல்லபன் படை வீட்டில், புண்டகசாலையில்' என கல்வெட்டு ஒன்று குறிப்பிடுதலாலும்

ஈண்டு அரசனது பண்டகசாலை இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க வேண்டியிருக்கிறது.

மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சோணாடு வழங்கிய சுந்தரபாண்டிய தேவரின் பத்தாமாண்டு (கி. பி. 1227?) கல்வெட்டொன்று காணப்படுகிறது. ஆனால் அது தெளிவாக இல்லை.

ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டிய தேவரின் 6, 7-ம் ஆட்சியாண்டு (கி. பி. 1251?) கல்வெட்டில் வணிகப் பொருளுக்குச் சுங்கம் விதித்தல், நந்தவனம் நடத்துதற்கு, ஏற்றுமதிப் பொருள்களுக்கு விதிக்கப்பட்ட வரியில் பகுதி கொடுத்தல் முதலிய செய்திகள் காணப்படுகின்றன.

ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீர பாண்டிய தேவரின் 26-ம் ஆட்சியாண்டு (கி. பி. 1271 ?) கல்வெட்டு வணிகப் பொருள்களை விற்பதற்கு தாகு கொடுக்கப்படுவதையும் 'பிள்ளை மகாபலிவாணரையர்' என்பவரையும் குறிக்கிறது. இதிலிருந்து அக் காலத்தில் வாணராயர் எனப்படும் அரசியலதிகாரிகள் அரசப் பிரதிநிதியாக இருந்தார்கள் எனத் தெரிகிறது.

எம்மண்டலமும் கொண்டருளிய திரிபுவன சக்கரவர்த்தி மாறவர்மன் குலசேகர தேவனின் ஆறும் ஆட்சியாண்டு கல்வெட்டு (கி. பி. 1274 ?) அரிகேசரி நல்லூர் பணி செய்பவர்கள் ஒரு நிலம் வழங்கிய செய்தியைக் கூறுகிறது.

இதுவரை கூறப்பட்டவை சிவன் கோவில் செய்திகள். இனி பெருமாள் கோவில் செய்திகள் அறிவோம்.

பெருமாள் கோவில் கல்வெட்டுகளில் மூன்றும் இராசசிம்மனின் கல்வெட்டுகளே பழமையானதாகும். இவனது 9-ம் ஆட்சியாண்டு (கி. பி. 909)க் கல்வெட்டு நாதன் விக்ரமாதித்தன் என்பான் இப் பெருமாளுக்கு விளக்கிடுவதற்காக ஐம்பது ஆடுகள் கொடுத்த செய்தியைக் கூறுகிறது. இவனது 46-ம் ஆட்சியாண்டு (கி. பி. 946)க் கல்வெட்டு ஸ்ரீகண்டன் கால்வாய்த் தண்ணீரைப் பாய்ச்சுகின்ற முறையைப் பற்றிய ஒப்பந்தச் செய்தியைச் செப்புகிறது.

பரகேசரிவர்மன் ராசேந்திர சோழதேவன் நான்காம் ஆட்சியாண்டு (கி.பி. 1086)க் கல்வெட்டு அரிகேசரி நல்லூர் என்ற மந்திர கௌரமங்களம், அரபாத சேகர மங்கலம், திருப்புத்தூர்

முதலிய ஊர்கள் மகாசபை மூலமாக, செயலாற்றியதை செப்பு கிறது. இவனது ஐந்தாமாண்டு (கி.பி. 1087)க் கல்வெட்டு மண்ணைக் கடகம்வரை வெற்றி பெற்றதைக் குறிப்பிட்டு அரி கேசரிநல்லூர், அரபாத சேகரமங்கலம் ஆகிய ஊரினர் விமானத் திற்கு விளக்கிட நிலம் விட்ட செய்தியை விளக்குகிறது.

ஜடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி குலசேகர தேவரின் மூன்றும் ஆட்சியாண்டு கி.பி, 1193) பதிமூன்றும் ஆட்சியாண்டு கி.பி. 1203க் கல்வெட்டுகள் கோயிலுக்கு நில வழங்கலை வடித் துக் காட்டுகிறது.

இங்ஙனம் தமிழகத்து இரண்டாயிரமாண்டு வரலாற்றையும், வாழ்ந்து சிறந்த அரசர்களையும், அவர்களின் ஆட்சிப் போக்கை யும், அவர்தம் அறச் செய்திகளையும், விளக்கும் செப்பேட்டுக ளையும் கல்வெட்டுகளையும் ஈண்டு காணலாம்.

*விவசாயம்*

உண்டி கொடுத்தாரே உயிர் கொடுத்தார் என்பது பழமொழி யும் பயனுள்ள மொழியுமாகும். அத்தகு உண்டிதரும் உயர் தொழிலாம் விவசாயம் இங்கு சிறப்பிடம் பெறுகிறது.

பெரியாறு பாசனத் திட்டத்தில் அமைந்து ஏறத்தாழ 2000 ஏக்கர்கள் நன்செய் நிலங்கள் நெல், வாழை. கரும்பு, வெற்றிலை முதலியவைகளை விளைவிக்கிறது.

கிட்டத்தட்ட எண்ணாயிரம் ஏக்கர்கள் புன்செய் நிலங்கள் வான் கருணையால் வளம் சுரக்கும். இதில் ஒரு பகுதி கிணற்றுப் பாசனம் பெற்றுள்ளது. முக்கிய விளைபொருள்கள் சோளம், கேழ்வரகு, துவரை, உளுந்து, புகையிலை, மிளகாய், வெங்காயம் முதலியன.

இரண்டுக்கு மிடையேயுள்ள நிலப் பகுதியில் தென்னந் தோப்புக்கள் மிகுதி.

ஏறத்தாழ முப்பதினாயிரம் ரூபாய்கள் வரை நிலவரியாக சின்னமனூர் செலுத்துகிறது.

*தொழில்*

சிறப்புத் தொழில் விவசாயம். நன்செய் நிலங்களில் நெல், வாழை, கரும்பொடு வெற்றிலைத் தோட்டங்கள் சிறப்பிடம் பெறு

கின்றன. மக்களில் ஆறிலொரு பகுதியினர் இத்தொழிலில் ஈடு பட்டுள்ளனர். இங்கு பயிராகும் வெற்றிலை இராமநாதபுரம், திரிச்சிராப்பள்ளி முதலிய மாவட்டங்களுக்கும் பிற இடங்களுக்கும் ஏற்றுமதியாகிறது.

அடுத்த சிறப்பான தொழில் வணிகம். நாடார் வகுப்பினர் பெரிதும் ஈடுபட்டுள்ளனர். சாம்பம் பள்ளத்தாக்கிலுள்ள கூடலூர், கம்பம் உத்தமபாளையம், கோம்பை, தேவாரம், போடி, தேனி முதலிய எல்லாச் சந்தைகளுக்கும் இவ்வூர் வணிகர் சென்று வருகின்றனர்.

பிற சிறு தொழில்கள் ஊர்த் தேவையை பூர்த்தி செய்கின்றன.

தீப்பெட்டித் தொழிற்சாலையும், எலும்பு உரத் தொழிற் சாலையும், நிறுவ முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஈண்டு வியாழக் கிழமைகளில் நடக்கும் சந்தை நல்லதொரு வணிக மையமாக விளங்குகிறது.

உழவுக்கும் தொழிலுக்கும் உதவும் வகையில் பதினெண் கிராம ஆரிய வைசிய பாடிகி, பாண்டியன் பாங்கி, சின்னமனூர் கூட்டுறவு கிராமிய பாங்கி முதலியவைகள் பணியாற்றி வருகின்றன.

காலை நான்கு மணியிலிருந்து இரவு பத்து மணி வரை திண்டுக்கல், பெரியகுளம், மதுரை, விருதுநகர், போடி, தேவாரம் குமுளி, பச்சைக்கூமாச்சி முதலிய பல்வேறு இடங்களை இணைக்கும் முறையில் நூற்றுக்கும் மேற்பட்ட உந்துருளிகள் இவ்வூர் வழியாக ஓடுகின்றன.

வடக்கே பதினான்கு கல் தொலைவில் தேனி வழியாக போடி—மதுரை இருப்புப் பாதையும் செல்கிறது.

### சமுதாயம்

இவ்வூர்வாழ் இருபதினாயிரம் மக்களையும் வேளாளர், தேவர், நாடார், மகமதியர், தாழ்த்தப்பட்டோர், பார்ப்பனர் என்ற ஆறு பெரும் பிரிவில் அடக்கலாம். பிற வகுப்பினர் மிகவும் சிறுபான்மையினர்.

பார்ப்பனர் தவிர்த்த அனைவரும் உழைத்து வாழும் பண்பும் நிலையினருமாவார். எனினும் அனைவரும் ஒற்றுமையாய் வாழ்ந்து வருகின்றனர்,

சாதிச் சண்டைகள், சமயப் பிணக்குகள் வர்க்கப் போராட்டங்கள் இங்கு காணக் கிடைக்காதன வாகும்.

என்றாலும் வகுப்புக்கொரு சங்கமும் பார்ப்பனர் சேரியும், தாழ்த்தப்பட்டோர் சேரியும் இங்கு காணலாம்.

*சமயம்*

இவ்வூராரை இந்துக்கள், மகமதியர்கள், கிறித்தவர்கள் என்ற முப்பிரிவில் காணலாம்.

இந்துக்கள் வழிபாட்டிற்காக சிவகாமியம்மன் கோவில், பெருமாள்கோவில், மாணிக்கவாசகர் கோவில், முதலிய பெருங் கோயில்களும் மாரியம்மன், காளியம்மன், பகவதியம்மன், மந்தையம்மன், முத்தாலம்மன் முதலிய சிறு தெய்வ வழிபாட்டிடங்களும் உள்ளன.

மகமதியர்கள் தொழுகைக்காக தனி மசூதி உள்ளது. பழங் காலத்தது. நீண்ட வரலாறு கொண்டது.

கிறித்தவர்களில் பழைய நெறியினருக்கும் புதிய நெறியினருக்கும் தனித்தனிக் கோவில்களுள்ளன.

இங்கு சித்திரையில் சிறப்பாக நடக்கும் திருவிழா வரலாற்றுச் சான்றுகளை உள்ளடக்கியுள்ளது.

விழாவில் ஒரு பகுதியான சமணர் கழுவேற்றம் தென்னாட்டில் நடந்த சமயப் போராட்டங்களையும், நரி பரியானது, பரி நரியானது முதலியன மாணிக்கவாசகர் கால வரலாற்றையும் நினைவுறுத்துவதாகும்.

சிறு தெய்வ விழாக்கள் பெரும்பாலும் அறுவடைக்குப் பின்னர் பொங்கல் விழாவோடு கலந்து நடைபெற்று வருகின்றன.

ஓய்வுநேரப் பொழுதுபோக்கு

கோழியோடெழுந்து கோட்டானோடுறங்கும் உழைப்பாளருக்கு ஓய்வுநேரம் கிடைப்பதரிது.

ஓய்வு கிட்டினால் பயனாகக்கழிய ஏழுபடிப்பகங்கள் உள்ளன, அவைகளில் ஒன்று சென்னை மாநில பொது நூல் நிலையச் சட்டத்தின் கீழ் எழுந்ததாகும். பிற இளைஞர் கழகங்களால் நடை பெற்றிலங்குகின்றன.

ஊராட்சி மன்றம் மூன்று இடங்களில் வானொலிக் கூடங்கள் அமைத்துள்ளது.

வகுப்புச் சங்கங்கள் சில சமயம் பஜனை முதலியன நடத்து கின்றன.

வயது முதிர்ந்தவர்களுக்கு கோயில்கள் வழிபாட்டிடமாகவும் பொழுது போக்கிடமாகவும் பயன்படுகின்றன.

சேக்கிழார் மன்றம், இளங்கோ மன்றம், குமரன் படிப்பகம் போன்றவைகள் அடிக்கடி பெரியோர் நினைவு நாட்கள் கொண் டாடியும், சொற்பொழிவுகள் நிமழ்த்தியும், விவாத அரங்குகள் நடத்தியும் பணிபுரிகின்றன.

இருபதாண்டுகட்கும் மேலாக இங்கு நிரந்தர சினிமா நிலைய மொன்று பொழுது போக்கிற்கு துணை புரிகிறது.

இவைகளைத் தவிர்த்து, அவ்வப்போது நடக்கும் நாடகங்கள், தெருக்கூத்துகள், சர்க்கசுகளும் தங்கள் பங்கைச் செலுத்துகின்றன.

கல்வி

ஒரு ஊரின் பெருமை மக்களின் மனவளத்தைக் கல்வி நிலை யைப் பொருத்தே அளவிடப்படுவதாகும். மக்கள் மக்களாக வாழ்வதும், மாக்களாக மடிவதும் கல்வியின் பயனேயாகும்.

இங்கு வாழும் மக்களில் ஐந்திலொருவர் எழுதப்படிக்கத் தெரிந்தவர் என்று குடிக்கணக்குக் கூறுகிறது.

இப் பெருமை பத்தொன்பதாம் நூற்றூண்டுக் கடைசியில் கல்விக் குழைத்த திருவாளர்கள் பெரியசாமிபிள்ளை, இராம பிள்ளை. நல்லமுத்து சேர்வை என்ற மூவரைச் சாரும்.

இவர்கள் காலத்தில் திண்ணைப் பள்ளிகூடங்களே நடந்து வந்தன. மணலில் எழுதிப் பழகிய பின்னர் ஏடு எழுத்தாணி கொண்டு கல்வி வளர்ந்தது.

பின்னர் 1906லே அதிகார பூர்வமான பள்ளி இரண்டு ஆசிரி யர்களுடனும் ஐம்பத்தொன்பது மாணவர்களுடனும் தொடங் கியது. இன்று அதுபோல. அருகுபோல் வேரோடி ஆல்போல தழைத்து நிற்கிறது. அதன் பயனாய் இன்று உயர்நிலைப் பள்ளி ஒன்றும், உயர்தர ஆரம்பப்பள்ளி ஒன்றும், ஆரம்பப் பள்ளிகள் பதினொன்றும் நடைபெற்று வருகின்றன.

முதற் பள்ளியின் பொன்விழா நடந்தேறியது.

இவைகளைத் தவிர பார்ப்பனர்களுக்காக வேதபாடசாலை ஒன்றும், மகமதியர்களுக்காக உருது மொழிப்பள்ளி யொன்றும் நடைபெறுகின்றன.

தொடுத்து இவ்வூர் கட்டாயக் கல்விப் பிராத்தியத்திலிருப்பது கல்வி வளர ஏதுவாகிறது.

அதன் பயனாக மூவாயிரம் மாணவர்கள் அறிவொளி பெற நூற்றி மூன்று ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, தொழிற் பள்ளி, கல்லூரி மூன்றும் எழுமாயின் கல்வி நிலை முழுமையடையும்.

*நிர்வாகம்*

பத்தொன்பதாம் நூற்றுண்டிலேயே எழுந்துவிட்ட ஊராட்சி மன்றம், அஞ்சலகம், போலீசு நிலையம் முதலியவைகளின் இடையருப் பணி சின்னமனூரைச் சிறந்ததொரு இடமாக்கி யிருக்கிறது.

தொடுத்து எழுந்த ஆவணக்களரி, பஞ்சாயத்துக் கோர்ட்டு' தலதாபன மருத்துவ நிலையம், மின் அலுவலகம் முதலியவைகள் மேலும் சிறப்புத் தர வழி வகுத்தன.

இப்பணியில் தொடர்ந்து ஊராட்சி மன்ற உறுப்பினர்களாய்ப் பணியாற்றியவர்களும், ஊராரின் பாராட்டுதலுக்கும் நன்றிக்கு முரியராவர்.

*எதிர்காலம்*

நேற்றைய நிலை வரலாற்றிலே கண்டோம். இன்றையப் போக்கை வாழ்விலே பார்க்கிறோம். நாளைய வளர்ச்சிக்குப் பாடு படுவோம்.

முதல் வகுப்பு ஊராட்சி மன்றமாயிருப்பது நகராட்சிமன்ற மாய் மாறவிருப்பது முன்னேற்றத்திற்கறி குறியாகும்.

பெரியாறு நீர்மின் விரிவுத்திட்டத் தொடர்பாய் 24 இலட்ச ரூபாய்கள் செலவில் பாதுகாக்கப்பட்ட குடி நீர் வசதியளிக்கும் முயற்சி விரைவில் செயற்பட விருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இச் சமயத்தில் ஊர்க்கழிவு நீர் போக்க இரண்டரைக் கல் நீளமுள்ள சாக்கடைகள் மேலும் விரிவாக்கப்பட வேண்டும். கழிவு நீர் விவசாயப் பண்ணையமைத்து வளர வழிகோலலாம். அப்போதுதான் குடிநீர் வசதி பயன் தந்ததாகும். இன்றேல் இரண்டும் கலந்து தில்லி மாநகரில் நடந்த தீங்கு திரும்ப நேரிடும்.

வளர்ந்து பெருகிவரும் ஊரின் சாலைகள் நன்கு பராமரிக்கப் பட வேண்டும். முக்கிய சாலைகள் சிமெந்து, அல்லது தார் கொண்டு அமையலாம். பிற சாலைகள் அவ்வப்போது கவனிக்கப் பட்டு செப்பனிட்டுப் பெற வேண்டும்.

பெருகுமூருக்குப் பொழுது போக்கிடங்கள் இன்றியமையா தனவாகும். இப்போதிருக்கும் சந்தை வெளி, சங்கிலி செட்டியார் பொட்டல் முதலியவைகளை சீர்திருத்தி பூங்கா அமைக்கலாம். சிறுவர் விளையாட்டிடங்கள் இணைக்கலாம். படிப்பகங்கள் நிறுவலாம். பொதுக் கூட்டங்கள் நடக்க நிரந்தர மான அமைப்புகளும் ஏற்படுத்தலாம்.

பதினைந்து பள்ளிகள் உள்ள ஊருக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றும், உடனடித் தேவைகளாம்.

முயன்றால் முடியாத தொன்றில்லை!

உழைப்பில் வாரா உறுதிகளுளவோ?

*[மேற் காணும் முறையைப் பின்பற்றி அவரவர் ஊரைப்பற்றி சிறந்த கட்டுரை எழுதி அனுப்புங்கள். ஆசிரியர்]*

---

## உரிமை அறிக்கை (விதி 8)

1. பதிப்பிடம் : 54A வேலூர்ச் சாலை,
   திருச்செங்கோடு-631211
2. காலம் : காலாண்டிதழ்
3. அச்சிடுவர் : நாரா. நாச்சியப்பன்
   நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
   சென்னை-14
4. பதிப்பர்
5. ஆசிரியர்
6. உரிமையர் } ச. பிரகதம்
   54A வேலூர்ச்சாலை
   திருச்செங்கோடு

சண்முகப் பிரகதம் ஆகிய நான் நானறிந்ததென நம்பு கிறபடி, மேலே காணும் அனைத்தும் உண்மையென அறிவிக் கின்றேன்.

ச. பிரகதம்
பதிப்பாளர்.

1-4-77

# சின்னமனூர்ச் செப்பேடுகள்

தொல்லியல் உலகில் சின்னமனூர் புகழ்பெற்றது அங்கு கிடைத்த இரண்டு செப்பேடுகளால். பாண்டிய மன்னர் பரம்பரை பற்றி செய்திகளை அறிய அவை உறுதுணையாக உள்ளன.

இவ்வூர் பெருமாள் கோயிலில் மடைப்பள்ளி கட்டுவதற்காகத் தோண்டிய கடைகாலில் இவை கிடைத்தன. சுமார் 90 ஆண்டுகட்கு முன்பு இவை கிடைத்தன.

சிறிய செப்பேட்டில் இடையில் சில ஏடுகள் காணவில்லை. அதில் பல பாண்டிய மன்னர்களின் பெயர்கள் இருந்திருக்கலாம். அவை கிடைத்திருந்தால் வரலாற்றுக் கோர்வை இன்னும் செப்பமாக இருந்திருக்கும். 8-11/12 அங்குல நீளமும் 3 அங்குல அகலமும் கொண்டது. மூன்று ஏடுகள் மட்டும் கிடைத்துள்ளன.

கிரந்த எழுத்தில் வடமொழி வாசகமும் வட்டெழுத்தில் தமிழ் வாசகமும் உள்ளன.

சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில் முதல் ஏடும் கடைசி ஏடும் கிடைக்கவில்லை. இடையில் ஏழு ஏடுகள் கிடைத்துள்ளன. 10 அங்குல நீளமும் $3\frac{3}{8}$ அங்குல அகலமும் கொண்டவை. கிரந்த எழுத்தில் வடமொழி சுலோகங்களும், வட்டெழுத்தில் தமிழ்ப் பகுதியும் எழுதப்பட்டுள்ளன. வடமொழியில் உள்ளவை பெரும்பாலும் பாண்டியர் புகழ்பாடும் புராணக் கதைகளும் அக்கால வரலாற்றுச் செய்திகளும் ஆகும். இவை தமிழ்ப் பகுதியிலும் உள்ளன.

### எழுத்துக்கள் பற்றி

தமிழ் எழுத்துக்கள் காலங்கள் தோறும் உருமாறி வந்துள்ளன. சங்க காலத்தில் வழங்கியவை 'தமிழ்' எனப்பட்டன. அவை காலப் போக்கில் உருமாறி வந்தன. பாண்டிய நாட்டில் வழங்கியவை வட்டெழுத்தாக உருமாறின. சோழ நாட்டில் வழங்கியவற்றில் மாற்றம் பெருத்த அளவு இல்லை. அவை தமிழ்

என்றழைக்கப்பட்டன. இராசராச சோழன் காலத்திற்குப் பின்னரே தமிழகம் முழுவதும் சோழநாட்டுத் தமிழ் எழுத்தே எல்லாப் பகுதிக்கும் புகுத்தப்பட்டது.

அண்மையில் கொங்குநாட்டில் சேலத்திற் கருகில் கேத்த நாய்க்கன் புதூரில் உள்ள பெரிய சக்கிலிச்சி ஏரி என்ற ஏரியில் இரண்டு கல்வெட்டுக்களைத் திருச்செங்கோடு, உதவிப் பொறி யாளர் கொடுமுடி ச. சண்முகன் அவர்கள் கண்டுபிடித்து அறிவித் துள்ளார் (தினமணி சுடர் 27-3-77) இரண்டிலும் எட்டாம் நூற்றுண்டு வட்டெழுத்தில் "ஸ்ரீ கிடங்கல்" புலியார் மகனல்லி ஓட்டை கண்டது என்று எழுதப்பட்டுள்ளது. எனவே இச் செப்பேடுகள் காலத்தில் கொங்கு நாட்டிலும் வட்டெழுத்தே ஆட்சியில் இருந்ததை அறியலாம்.

கோவைக் கருகில் இராசராச சோழன் காலத்திய ஒரு சாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் வட்டெழுத்தில் ஒரு வெண் பாக் காணப்படுகிறது. அதனருகில் தமிழ் எழுத்தில் 'இராசகேசரிப் பெருவழி' என்றும் எழுதப்பட்டுள்ளது. பேரரசன் இராசராசன் எழுத்துச் சீர்மையில் ஆர்வம் கொண்டிருந்தது இதனால் புலப் படும். தமிழகம் முழுவதும் வட்டெழுத்து மாறி தமிழ் எழுத்து ஆதிக்கம் பெற்றது தெளிவாகும்.

செப்பேடுகளில் காணப்படும் வடமொழி வாசகம் கிரந்தம் என்னும் வடிவில் அமைந்தது. கிரந்தம் தமிழ்நாட்டில் தோன்றியது. தென்னாட்டில் மட்டுமே வழங்குவது. வடக்கில் சமத்கிருதத்தை எழுத நாகரி எழுத்து பயன்பட்டது. நாகரி எழுத்தை விரும்பாத தமிழர்கள் கிரந்தத்தை அமைத்துக் கொண்டனர். சின்னமனூர் பெரிய செப்பேட்டில் கிரந்த எழுத்துக்களின் ஊடே தமிழ்ச் சிறப்பெழுத்துக்களான ழ,ற முதலியன கலந்து வருவதாகும்.

*சில செய்திகள்*

பாண்டியர்களைப் பற்றிய புராணச் செய்திகள் பல இச் செப்பேடுகளில் வருகின்றன. சங்க இலக்கியங்களில் காணப் படாதவை.

புராணக் கதைகளில் ஒன்று பாண்டியர்களின் முன்னோர் இமயமலையில் வில், கயல், புலி ஆகிய மூன்று சின்னங்களையும் பொறித்ததாகும். இமயத்தில் யார் பொறித்தார்களோ, தெரியாது. ஆனால் பொறித்தது உண்மை. இமயத்தின் காலடியில் உள்ள கங்கைக் கரை நாடான உத்திரப் பிரதேசத்தின் இன்றைய

அரசாங்க முத்திரை மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டு மேல் பாகத்தில் வில்லும், கீழிரண்டு பாகத்திலும் இரண்டு மீனும் உள்ளன. உத்திரப் பிரதேச லாட்டரிச் சீட்டு வாங்குவோர் அதில் இந்த முத்திரையைக் காணலாம். கடந்த 2000 ஆண்டு களாக அந்த மக்கள் இச் சின்னங்களைத் தம் பெருமைக் குரியனவாகக் காத்துவருகின்றனர்.

பெரிய செப்பேட்டை வழங்கிய இராசசிம்மன் பொன்னி (காவிரி)க் கரை மீதமர்ந்த வஞ்சி (கரூர்)யை வென்றான் என்று கூறப்படுகிறது. 'பொழில் புடை சூழ் மதிள் வஞ்சி' என்பது வாசகம். எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டில் கரூர் வஞ்சி என்ற பெயரில் வழங்கி வந்தமை இதனால் அறியலாம். கரூரில் பத்தாம் நூற்றாண்டு நடுகல் ஒன்று வஞ்சி வேள் என்பானைக் குறிக் கின்றது. சங்ககால வஞ்சி எதுவாக இருந்தாலும் இடைக் காலத்தில் கருவூரே வஞ்சி என்ற பெயரில் இருந்துள்ளது. சேரவரசர் தலையெடுக்க முடியாமல் சின்னஞ்சிறு சிற்றரசாக இங்கே இருந்து அவ்வப்போது படையெடுத்து வந்தவர்களிட மெல்லாம் அடிவாங்கிக் கொண்டு இருந்துள்ளதை அறியலாம்.

## கொடை

பெரிய செப்பேட்டில் மொத்தக் கருத்து இராசசிம்மன் அழல் நாட்டில் நற்செய்கைப் புத்தூர் என்ற ஊரை மந்தரகௌரமங்கலம் என்ற பெயருடன் தானமாக வழங்குகிறான். பார்ப்பனருக்குப் வரியிலாத நிலமாக வழங்கப்படுகிறது.

இன்று தமிழ்நாட்டில் பல கிராமங்களும், நிலங்களும் 'இனாம் பூமி' என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை யெல்லாம் கோயில் குளங்களில் பூசை செய்பவர்களுக்கும், பூசைச் செலவுக்கும் அளித்தவை. காலப்போக்கில் ஆண்டவனை மறந்துவிட்டு, நிலத்தைப் பராதீனம் செய்து விட்டார்கள்.

## பண்பாடு

அக்கால பண்பாடு, பழக்க வழக்கங்கள், நாட்டுப் பிரிவினை, அதிகார முறைமைகள், அரச நீதிகள் முதலான இச் செப்பேடுகளால் தெளிவாகின்றன. நேயர்களின் பட்டயத்தின் முழு வாசகத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு, அதன் பொழிப் புரையை வெளியிடுகின்றோம். தமிழ் வரலாற்றுக் கழகம் வெளி யிட்ட பாண்டியர் செப்பேடுகள் பத்து என்ற நூலில் உள்ளவாறு தந்துள்ளோம்.

கொடுமுடி
31—3—1977

# சின்னமனூர் (சிறிய) சாசனம்

## தமிழ்ப் பகுதியின் பொழிப்புரை

சந்திர வம்சத்தில் தோன்றி இந்திரன் அழிவு நீங்குமாறு, போர்முனையில் அசுரர் கூட்டம் முதலோடு அழியும்படி வில்லை வளைத்ததும், இமயமலை யுச்சியில் அழகிய கயற்சின்னம் பொறித்ததும், தெற்குத் திக்கிலுள்ள பொதிய மலை மீது உறையும் குடமுனியின் இனிய தமிழால் தங்கள் செவிகளைக் கழுவியும், இந்திரனது ஆரத்தை அணிந்தும், அவனோடு ஒக்க ஆசனம் அமர்ந்தும், அவனது திருமுடியில் வளை உடைத்ததும், கடல் பின் வாங்க வேலை எறிந்ததும், ஓராயிரம் வேள்விகளைச் செய்ததும், பூத கணங்களைக் கொண்டு பணிகளைச் செய்வித்தும், பூமி எல்லா அரசர்களுக்கும் பொது என்பதை நீக்கியும், (பாவலர்களுக்கு) ஆயிரம் யானைகளை வழங்கியும், இத்தகைய எண்ணிறந்த அதிசயங்களைச் செய்து, குறைவற்ற புகழை யுடைய பாண்டிய வம்சத்து அரசர் பலர் மறைந்தனர். பின்னர், உலகம் பாடிப்பரவும் பெரும்புகழ் படைத்த ஜயந்தவர்மருடைய மகனாகி பகையரசர் தலைநடுங்கும்படி பரமேச்வரனாக வெளிப்பட்டான்.

அவன் அரிகேசரி (பகைவர்க்குச் சிங்கம் போன்றவன்) அசமசமன (தனக்கு இணையில்லாதவர்களுடனும் சமமாகப் பழகுகிறவன்); அலங்க்ய விக்ரமன் (கடத்தற்கரிய வல்லமையுள்ளவன்); அகால காலன (காலமில்லாக் காலத்தில் பகைவர்களுக்கு யமன் போன்றவன்); என்னும் பல குணங்களை யுணர்த்தும் பெயர்களை உடையவன்; இப் பெயர்களையும், குணங்களையும் உலகம் முழுவதும் உகந்து ஏத்தவும், பிற மன்னர் கூட்டம் தம்மை வணங்கவும் பரந்த பூமியைத் தனக்கே உரிமையாக்கிக் கொண்டான். இம் மன்னன் அந்தணர்களது இடர் நீங்க அவர்களுக்கு முகில்போல் பொன்மழை பெய்வதையே நோன்பாகக் கொண்டும், துலாபாரம் ஏறியும், ரட்சகனாக உலகத்தைக் காத்தும், இருமுறை இரணிய கர்ப்பம் புகுந்தும்,

கோசகஸ்ரம் முதலான பெரிய தானங்களைச் செய்தும், இந்திரன் போல வீற்றிருந்தான்.

இவனுடைய மகன் பூமண்டலத்தைத் திங்களையொத்த வெண்கொற்றக் குடைக் கீழ் கொணர்ந்து யாதொரு குற்றமின்றி அருள் கொண்டு கற்பகம் போல் வரையாது கொடுக்கும் விரதம் பூண்டவன். இவன் கலியுகத்தின் மாசை அறவே நீக்கிப் பெருஞ்செல்வத்தைக் கொடுத்து அந்தணர் இடர் நீக்கித் தன் வலிமையைக் கருதாமல் தன்னை எதிர்த்த, வீரக்கழலை யணிந்த மன்னர்களை அவர்கள் ஒருங்கே அழியும்படி, மருதூர், குவளைமலை என்னும் இடங்களில் யானைகளைச் செலுத்தி......

[இந்த இடத்தில் சில ஏடுகள் கிடைக்காதபடியால்
இதன் வாசகம் தொடர்ச்சியாக இல்லை]

(இதன் நான்கெல்லை)

.....க்குக் கிழக்கு, வடவெல்லை கொற்றன்புதூர் பகவதி கோயிலுக்குத் தெற்கு இவ்வாறு சொல்லப்பட்ட பெரு நான்கெல்லைக் குட்பட்டதாகும். இதற்கு ஆணத்தியாக இருந்தவன் அண்ட நாட்டுக் குண்டூர்க் கூற்றத்துக் குண்டூர் உத்தரமந்திரி யாகிய தாயன் சிங்கன் ஆவன்; இந் நிலத்திற்குரிய புறங் காவல் எண்பத்தைந்து கலமாகும். இதனைக் காத்தார் அடி தன் முடிமேல் எனக் கொற்றவனே பணித் தருளி அதனைத் தாம்பிர சாசனம் செய்வித்தான்......பாண்டிப் பெரும்பணைக் காரன் அரிகேசரி எழுத்து.

# சின்னமனூர் (பெரிய) சாசனம்

## தமிழ்ப் பகுதியின் பொழிப்புரை

பாண்டிய வம்சம், பாற்கடல் கடைந்த போது அதிலிருந்து தோன்றிய திருமகளோடும், தேவாமிர்தத்தோடும் (திருமால் தன் மார்பில் அணிந்து கொண்ட செந்நிற ஒளி வீசும் கௌஸ்துப மணியோடும். ஐராவத யானையோடும் வெளிப்பட்டு, சிவபெருமானுடைய மகுடமாகிய ஆசனத்தில் வீற்றிருக்கும் சந்திரன் குல முதல்வனாகத் தோன்றியது. நான்கு திசையில் உள்ளவர்களும் புகழ இந்தப் பூமியில் நிலைபெற்றது. பாரத்துவாச முனிவர் முதலானவர்களால் சந்திர வம்சச் சிறப்பு பாண்டிய மன்னர் முன்னிலையில் புகழப்பட்டது. எதிரிகள் சேர்ந்து பழகுவதற்கு முடியாதது. கல்வெட்டு முதலிய பாண்டிய சாசனங்களில், எதிர் எதிராக உள்ள இரண்டு மீன்களை அடையாளமாகக் கொண்டுள்ளது. ஒப்பற்ற பெருமையுடைய அகத்திய முனிவரைத் தனது ஆசானாகக் கொண்டது. அழியாது நிலைபெற்று நிற்பவனான ஒப்பற்ற கடவுளைத் தனக்குத் துணையாகக் கொண்டது. அத்தகைய சிறப்புடைய அந்த வம்சம் வாழ்வதாகுக.

வானத்தை எல்லையாகவுள்ள பூமி முழுவதையும் தன்னடிப் படுத்தியும் தேவர்களும், அசுரர்களும் அமிர்தத்துக்காகப் பாற்கடல் கடைந்த பொழுது, அவர்களுக்கு உதவியாகத் தன் சேனையுடன் சென்று பணி புரிந்தும், பூமியிலுள்ளோர் அனைவரும் ஓர் அரசன் கீழுள்ள குடி மக்கள் என்று வியப்புறும் படி ஒரே நாளில் நாற்றிசையிலுள்ள கடல் நீரைக் கொணர்வித்து மங்கல நீராடியும், மங்குதலில்லாத ஒளியுடைய மணிகள் பதித்த முடியுடன், சங்குகளால் செய்த வெண்ணிறம் பொருந்திய வீரவளையை அணிந்தும், நிலவுலகத்தை வலமாக வந்தும், நிகரற்ற வெற்றியால் தன்னோடும் போர்புரிய வரும்படி தேவர்களுக்குப் பலமுறை தூது அனுப்பியும், இந்திரனுடைய தாங்க முடியாத பெரும் பாரத்தையுடைய பொன்னாரத்தைத் தாங்கியும், சிவந்த மணிகள் பதித்த அணிகலன் முதலியவற்றை அணிந்தும், தென்னாட்டில் வழங்குவதாகிய (அல்லது அழகிய)தமிழ் முழு

வதையும் அறிந்தும், பகைவர் மீது போர்க்களத்தில், செலுத்தக் கூடிய ஒரு வேலாயுதத்தை விட்டும், அளவுக்கு மீறிப் பெருகி மதுரையை அழிக்க வந்த கடலைத் திரும்பிப்போகி(அல்லது வற்ற)ச் செய்தும், பூழியன் எனப் பெயர் எய்தியும், ஆயிரம் யானைகளைத் தானம் வழங்கியும். பாழி என்ற ஊரை அங்கே அரியணையில் சில நாள் தங்கியிருந்தும், பாண்டவர்க்குரிய பஞ்சவன் என்னும் பெயரைக் கொண்டும், வளப்பம் பொருந்திய மதுரை மாநகர் கண்டும், அந் நகரத்துக்கு மதில் எடுப்பித்தும், மிக்க மதியினால் ஒண்தமிழையும், வடமொழியையும், ஐயம் திரிபு அறக்கற்று, ஆராய்ச்சி செய்து, புலவரின் மேம்பட்டு நின்றும், பாரதப் போரில் யானையேறிச் செலுத்திப் பெரிய சேனாதிபதிகளை யுத்தகளத்தில் இறக்கும்படி செய்தும் அஷ்ட வசுக்களால் அர்ச்சுனனுக்கு நேர்ந்த சாபத்தைப் போக்கியும், பகையரசர்களைப் போரில் தோல்வியுறச் செய்து அவர்களைக் காட்டிற்கு ஓடத் துரத்தியும், சேர, சோழ, மன்னர்களை வென்று அவர் கொடிகளில் குறிக்கும் அடையாளங்களாகிய புலியையும் வில்லையும் அவைகளோடு தனது கொடியின் அடையாளமாகிய மீனையும் இமயமலைச் சிகரத்தில் இம் மூன்று அடையாளங் களைப் பொறித்தும், (தான் கற்ற ஒரு மந்திர வலியினால்) ஒரு பெரிய பூதத்தை வசியஞ் செய்து, அதனால் தடாகங்கள் பல அமைத்துத் தன்னாட்டில், கொடிய பசி நோய் நீக்கச் செய்தும், தலையானங்கானம் என்னுமிடத்தில் தன்னோடு சமமான இரு வேந்தரைப் போர்க்களத்தில் கொன்று தலை வெட்டப்பட்ட முண்டங்கள் போர்க்களத்தில் ஆடுவதாகிய கூத்தை ஒழித்தும், பாரதத்தைத் தமிழ்ப்படுத்தியும், மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைத்தும் ஆண்ட பேரரசர்களும், சார்வ பௌமரும் அரசாட்சி செய்து மறைந்த பின்னர் ;

ஒரு சேர அரசனை நெல்வேலியிலும், ஒரு பல்லவ அரசனைச் சோலைகள் சூழ்ந்த சங்கரமங்கையிலும், தோற்றோ டச் செய்தவன் பராங்குசன் என்னும் பாண்டியன், இப்பராங்கு சனுக்கு இராசசிங்கன் பேரன் ஏனைய மன்னர்கள் கீழே விழுந்து வணங்கும்படியான வீரக்கழலையணிந்த கால்களையுடைய தலைவனான வரகுணபாண்டியன் அவனுடைய மகன்.

இவ்வரகுணனுக்கு மகனாகிப் பூமியைக் காப்பதாகிய பாரந்தாங்கி, மலர்களின் மணம் வீசும் சோலைகளையுடைய குண்ணூரிலும், இலங்கையிலும், விழிஞத்திலுந் பகைவர்களை வென்றமைக்கு அறிகுறியாகப் பொன்னால் செய்த வாகைப் பூவைச் சூடி வளையாத செங்கோலைச் செலுத்திப்

பின், வாசனை விரியும் பொழில் சூழ்ந்த கும்பகோணத்தில் போர் புரியும் பொருட்டு வந்து எதிர்த்த, கங்கர், பல்லவர், சோழர், கலிங்கர், மகதர் முதலிய அரசர்கள், இரத்த வெள்ளத்தில் குளிக்குமாறு, கூர்மையும் கொடுமையும் உடைய அம்புகளைச் செலுத்திப் பராக்கிரமத்தில் சூரியனோடு ஒப்ப விளங்கிய பரசக்கிரக் கோலாகலனும்; அரசர்கள் தமது வீரக்கழல் அணிந்த காலை வணங்கும்படிப் பூமண்டலத்தைப் பொதுவென்பதன்றித் தனக்கே உரித்தாக்கிக் கொண்ட மலையை ஒத்த அழகிய பெரிய தோள்களையுடைய அரசர்க்கரசனாகிய வரகுணவர்மனும், அவ்வரகுணவர்மனுக்குத் தம்பியாகி மனுசரிதன், வாட்சடையன் என்னும் அடைமொழியோடு கூறப்பட்டு உயர்ந்த பொன்னாபரணங்களை அணிந்தவனாகிய சிரீபராந்தகன் அலங்கரித்த இரத்தினங்கள் பதித்த பொன்மகுடம் தரித்து நிலத்தைத் தொடும்படியான துதிக்கையுடைய யானைக் கூட்டங்களும், குதிரைக் கூட்டங்களும், வீரர்களும், செந்நிலமாகிய போர்க்களத்தில் நிலம் சேரும்படி வலிய தன் வில்லினிடத்து அம்புகளைப் பாய்ச்சியும், கரகிரி என்னுமிடத்தில் பகைவர்களின் சிறந்த யானைக் கூட்டங்களைச் சிறைப்படுத்தித் தன் நகருக்குக் கொணர்ந்து, பின் (படைகள் செல்வதனால்) பூமியானது பெயர்ந்து போகும்படியாகத் தன் நகரத்தைக் கடந்து விரிவான பெண்ணாடகம் என்னும் ஊரை அழியச் செய்தும், போர்க்களத்தில் ஆரவாரித்து வருகின்ற ஒரு குதிரையைச் செலுத்தி அகன்ற கொங்கு நாட்டில் நிகழ்ந்த போரில் வெற்றி பெற்றும், கோயில்களுக்கு இறையிலியாக, நிலம் விட்டும், அந்தணர்களுக்குக் குடியிருக்க அளித்த அகரங்களை (அக்கிரகாரங்களை(ச்) சீர்ப்படுத்தியும், பாரத நாடு முழுவதையும் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்த இந்த சிரீபராந்தகனும் சொர்க்கம் அடைந்தான்.

பின் இலக்குமிக்குச் சமானமான வானவன் மாதேவி என்பவள் முதலில் பெற்றெடுத்துப் பாண்டியர்களுக்குத் தலைவனாகிய இராசசிங்கன் விகடவாடவன் என்னும் பட்டம் பெற்று, பாம்புக்கு அரசரான ஆதிசேடன் தன் ஆயிரம் தலையால் அரிதாகத் தாங்குகின்ற இந்தப் பூமண்டல பாரத்தைத் தாங்கும் அழகிய தோள்களையுடையவன், உலப்பி நிமங்கலம் என்னும் ஊரில் எதிர்த்த பகைவர் உடலை வெட்டி உகுத்த இரத்தம் பூமிதேவிக்கு உடற்பூச்சாக ஓடும்படி தந்தும், வயல்களில் தேங்கி நிற்பதும், சிறப்பாக எடுத்துக்கூறப்படுகின்ற காவிரி நீர் பாயும் வளமுடையதுமான தஞ்சை அரசனை நைப்பூர் என்னுமிடத்தில் நடந்த போரில்

மலை போன்ற தோற்ற முடையவனது படைப் பரிசாரம் தந்து புறங்காட்டி ஓடத் தன் வெற்றி முரசு முழக்கியும், கொடும்பாளூரில் ஒலிக்கின்ற கடல் போன்ற நிறைந்த பெரிய சேனைகள் துன்ப முற்று ஓடும்படி தன் இரெணோதயம் என்னும் யானை மேல் ஏறியும், தெளிந்த நீரையுடைய பொன்னி நதியின் (ஆம்பிராவதி) வடகரையிலுள்ள சோலை சூழ்ந்த மதிலையுடைய வஞ்சியில் (வஞ்சி—கருவூர்) கண்ணில் நெருப்புப் பொறி பறக்குமாறு கோபத்தோடு எதிர்ந்த பகையரசர்களின் தலையிலா முண்டங்கள் துள்ளிக் கூத்தாடும்படிக் கண்சிவந்தும், சேவலை உயர்த்திய கொடியையுடைய முருகக்கடவுள் தேவாசுர யுத்தத்தில் சீறி எழுந்தமை போலக் கோபித்துத் தென்னாட்டில் உள்ளதாகிய தஞ்சை மண்டல அரசனுடைய மூவகைப் படைகளும் போர்க்களத்தில் இறந்தொழியும்படி அழகிய, தண்ணீரால் சூழப்பட்ட திருவானைக்காவில் தனது பட்டத்துக்குரிய, தாவும் குதிரையின் வலிமை இத்தகையது என்று உலகத்துக்குக் காட்டியும், வெற்றிக் கொடியை வானளாவப் பரவச்செய்தும், தன் அரசாட்சி எண் திசை எல்லை அளாவவும், கடிவாளமிட்ட குதிரைகளையும் யானைகளையும் செந்நிற மணிகள் பதித்த பொன்னாரங்களையும் கொணர்ந்தும், முடிசூடிய மன்னர்கள் காணிக்கையாகத் தன்முன் செலுத்திக் காலை வணங்க, சிறந்த இந்திரனது போகத்தைப் போன்ற செல்வ போகத்தை அநுபவித்தும் விகடவாடவன், சிரீகாந்தன் (இலக்குமியின் கணவன்), மீனாங்கி தசைலேந்திரன் (இமயத்தில் மீனைப் பொறித்தவன்), இராஜசிகாமணி (அரசர்கள் உச்சியில் வைத்துக் கொண்டாடும் மணி போன்றவன்) தென்னன் (தென் திசைக் கதிபன்) ராஜிதகுண கண நங்கோன் (அரசர்க்குரிய குணங்கள் அனைத்தும் நிறைந்த நம் தலைவன்) என்னும் விருதுப் பெயர்களைப் பூண்டு, அளவற்ற அகரங்களும், கோயில்களுக்கு விடப்பட்ட அளவற்ற தானங்களும், பள்ளிகளுக்குரிய நிவந்தங்களும் எல்லாத் திசைகளிலும், இனிதாகச் செய்தும் ஒலிக்கின்ற கடல்போல முரசுகளின் ஒலி முழங்க இராசசிங்கப் பெருங்குளக் கீழ் என்ற பிரதேசத்திற்குட்பட்ட சூழல் என்ற கிராமத்தில் எழுந்தருளியிருந்து தன் ஆட்சியாண்டு பதினாறில். மாக்கொழுவூர்க் கூற்றத்தில் நீர் ஓடுகின்ற குண்டாற்றின் மேல் கரையில் கொத்துக்கள் பொருந்திய சோலைகளையுடைய புத்தூர்க் கிராமத்தில், கௌசிக கோத்திரத்தில் ஆக்நிவேச்ய கல்பத்தில், ஒப்பாழ்வரில் மிக்கோனும் பெரும்புகழ் வாய்ந்தவனும் ஆகிய செட்டி என்பானது சிறந்த மகன், நிலத்தவன், நன்மை மிக்க பாஸ்கர நந்தனன் என அழைக்கப் பெறுபவன் படைக்கமலவனச் செங்குடிக் கௌசிகன், தென்னவர் கோனாகிய

பராந்தகன் ஸ்ரீ விர நாரணன் அருளால் வடகளவழி நாட்டில் திசைச்சுடர் மங்கலம் என்னும் ஊரை ஏகபோகப் பிரமதேயமாகப் பெற்றான். தாமரை மலரை ஆசனமாக (இருக்கையாக) உடைய பிரமாவைப் போன்றவனும் பலரால் புகழப்படுபவனுமாகிய (மேற் குறித்த) பாஸ்கரன் செட்டி என்பவனது பெருமை பொருந்திய மகன் சன்மார்க்கன், சற்குணத்தவர் நண்பன், நற்குணங்களுக்கு இருப்பிடமானவன், பராந்தகன் என்னும் பெயருடையவனுக்கு அருள்புரியும் திருவுள்ளமுடையவனாய், இராசசிம்ம பாண்டியன், அழகிய குளிர்ந்த நீரையுடைய அழல் நாட்டிலுள்ள நற்செய்கைப் புத்தூர்க்குத் தன் பெயரால் மந்தர கௌரவ மங்கலம் எனப் பெயரிட்டு, காராண்மை மீயாட்சி உள்ளடங்க ஏகபோகப் பிரமதேயமாகக் கொடுத்தருளினன். இங்ஙனம் செய்தருளுமாறு விண்ணப்பஞ் செய்தவன், சோழநாட்டுப் புல்ல மங்கலத்துச் சடையபிரான் பட்ட சோமயாஜி ஆவன்.

இதற்குக் களவழி நாட்டு வேம்பற்றூர்க் கூற்றங்கோன் என்பானை ஆணை ஆளாகவும், கீழ் வேம்ப நாட்டுக் கூரக் குமரனை குடிகாவல் நாயகனாகவும், திருக்கானப்பபேர்க்கூற்றத் துச் சிறுசெவ்லூர் நக்கங்காடனும், மிழலைக் கூற்றத்து நடுவிற் கூற்றில் துஞ்சலூர்ப் படாரஞ் சோலையும், களாத்திருக்கைப் பெருங்காக்கூர்க் கோன்வேளானும் கணக்கராகவும், அழல் நாட்டு நாட்டார் நின்று எல்லை பிடி சூழ்ந்த ஊரின் நான்கெல்லையாவது

கீழெல்லை சுருளியாற்றிற்கு மேற்கு, தெற்கெல்லை கற்குளத்தில்... .......

(எஞ்சிய பகுதியுள்ள ஏடுகள் கிடைக்கவில்லை).

---

. இச்செப்பேட்டின்படி பாண்டியர் வழி முறை

பராங்குசன்
(நெல்வேலியில் சேரனையும் சங்கரமங்கையில் பல்லவனையும் வென்றவன்)
|
(பேரன்) இராஜசிங்கன்
|
வரகுண மகாராஜன்
|
பரச்சக்கர கோலாகலன்
|
வரகுணவர்மன் — பராந்தக சடையன்
| (பராந்தக சடையன்)
இராச சிம்மன்
(இச்செப்பேடு வழங்கியவன்)

## செப்பேடு தந்த பிற பாண்டியர்

(சங்க காலம்) கடுங்கோன்

|

(கி.பி. 7முற்பகுதி) மாறவர்மன் (அவனி சூளாமணி)

|

(கி.பி. 625—640) செழியன் சேந்தன்

|

(கி.பி. 640—670) அரிகேசரிமாறவர்மன் (கூன்பாண்டியன்)

|

(கி.பி. 670-710 வரை) கோச்சடையன் ரணதீரன்

|

(கி.பி. 710-765 வரை) அரிகேசரி பாரங்குச மாறவர்மன் (இராசசிம்மன்)

|

(கி.பி. 765-790 வரை) நெடுஞ்சடையன் (ஜடிலன் பராந்தகன்)
(3ம் ஆட்சியாண்டில் வழங்கியது வேள்விக்குடிச் செப்பேடு. 17ம் ஆட்சியாண்டில் வழங்கியது சீவரமங்கலம் செப்பேடு. சின்னமனூர் சிறிய செப்பேடு வழங்கிய ஆண்டு தெரியவில்லை).

|

(கி.பி. 792-835 வரை) வரகுண மகாராசன்

|

(கி.பி. 835-862 வரை) சீமாறன் (ஸ்ரீவல்லபன், பரச்சக்கர கோலாகலன்)

|

- வரகுண மகாராசன் (கி.பி. 862—880 வரை)
- பராந்தகன் சடையன் (880—900) (தளவாய்புரச் செப்பேடு)
  |
  இராசசிம்மன் (900-முதல்) (சின்னமனூர்ப் பெரிய செப்பேடு)
  |
  வீரபாண்டியன் (கி.பி. 966 வரை) (சிவகாசிச் செப்பேடு)

# நேயர்களே

வணக்கம். பாரத நாடு ஆறவது பொதுத் தேர்தலை முடித்துக் கொண்டு புதிய அரசாங்கத்தைப் பெற்றுள்ளது. பண்டைத் தமிழ்நாட்டில் சீட்டுக் குலுக்கிக் குடத்தில் இட்டு அதில் பொறுக்கி எடுப்பர் என்று உத்தர மேரூர் கல்வெட்டு கூறுகிறது. தகுதியுள்ள யார் வேண்டுமாயினும் வரலாம் அன்றோ?

அரியணையில் யார் வந்தாலும், அதிகார வர்க்கம் சற்று நடுநிலையிலேயே இருத்தல் இன்றியமையாதது. கடந்த ஆண்டு அவ்வாறு நிகழ்ந்துபோன இரு செய்திகளாவன;

1. தமிழ்நாட்டில் தற்போது பல்தொழிற் கல்லூரிகளில் இரண்டு பாடங்கள் தமிழில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அப்படி யிருந்தும் தமிழ்நாட்டுப்பாட நூல் நிறுவனம் பொறி யியல் நூல்களைத் தமிழில் வெளியிடத் தேவையில்லை என்று முடிவு செய்து விட்டது ஏன்?

2. தமிழ்நாடு தொலைக் காட்சி நிறுவனத்தாருக்கு, இலங்கையில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் செய்திப் படத்தை அனுப்பியிருந்தோம். அதனை ''திரையிட இயலாமைக்கு வருந்துகிறோம்'' என்று பதில் வந்து விட்டது

தமிழ்நாட்டில் தமிழ்வளர்ச்சிப் பணியில் ஈடுபடுவது பிழையா? கடந்த ஓராண்டு கால ஆட்சியில் இது போல எத்துணையோ?

வாழிய செந்தமிழ்
வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு

—ஆசிரியர்

# Sinnamanur Inscriptions

A. R. E.

339. 428 of 1907.—(Tamil). On the south wall of the central shrine in the Rajasimhesvara temple. Records in the third or thirtieth year of the Pandya king Maravarman alias Tribhuvanachakravartin Kulasekharadeva (I, 1268-1308) "who was pleased to take every country" a sale of land. Mentions the temple of Rajasimhesvara-mudaiya-Nayanar in Sri Arikesari-nallur, a brahmadeya in Ala-nadu. (See Ep. Ind;, Vol. X, p. 140, where it is pointed out that the date (Rishabha, Purvapaksha, Chaturthi, Thursday, Punarvasu) corresponded either to May 14th, A. D. 1271 or May 15th, A. D. 1298).

340. 429 of 1907.—(Tamil.) On the same wall. A mutilated record of the Pandya king Maravarman alias Tribhuvanachakravartin Kulasekharadeva (I, 1268-1308) ' who was pleased to take every country," dated fortyfirst year. Refers to the tenth year of Sri-Sundara-Pandyadeva.

341. 430 of 1907.—(Tamil) On the same wall. Records in the twenty-sixth year of the Pandya king Jatavarman alias Tribhuvanachakravartin Vira-Pandyadeva gift of the proceeds of contributions on the sale of certain articles of merchandise. Mentions Pillai-Kulasekhara-Mahabali Vanarayar, also the temple of vikrama-Pandisvaramudaiya-Nayanar at Sivallavanpadaividu. The Government Epigraphist points out that the name Kulasekhara Vanarayar was perhaps taken from either the son father of Vira Pandya and that as Maravarman Kulasekhara I was preceded by a Jatavarman Vira Pandya, we have to identify the ruling king of this epigraph with him.

342. 431 of 1907—(Tamil.) On the north wall of the same shrine. An unfinished record of the Pandya king Maravarman Tribhuvanachakravartin Kulasekharadeva (I, 1268-1308), "who was pleased to take every country", dated forty-first year. The temple is called Udaiyar Tiruppulandurai Uraiudaiyar alias Rajasimha-Cholisvara-mudaiyar at Arikesari-nallur. See Ep. Ind., Vol. X, p. 141, where it is pointed out that the details of the date (Ani, 14, Purvapaksha I, Monday, Punarvasu) Corresponded to Monday, 9th June, A. D. 1309, Mr. R. Sewell remarks that this is the latest date of the king thus far available; and that the present epigraph further proves "that the king's reign could not have begun before the 10th June 1268, and gives us as the limit of possible accession the period June 10th to 27th 1268 A. D."

343. 432 of 1907.—(Tamil.) On the same wall. A record of the Pandya king Maravarman alias Tribhuvanachakravartin Kulasekharadeva "who was pleased to take every country," in his twenty-sixth year. Records gift of land by the mahasabha, the pannaiseyvargal and the veliseyvargal of Sri-Arikesari-nallur. a brahmadeya in Ala-nadu. Mentions the Suruli-aru.

344. 433 of 1907.—(Tamil.) On the north wall of the central Shrine in the Rajasimhesvara temple. Records in the sixth year of the Pandya king Jatavarman alias Tribhuvanachakravartin Sundara-Pandyadeva gift of the proceeds of tolls levied on certain articles of merchandise.

345. 434 of 1907.- (Tamil.) On the same wall. Records in the seventh year of the Pandya king Jatavarman alias Tribhuvanachakravartin Sundara-Pandyadeva gift of certain contributions on exports for maintaining a flower garden. Mentions the temple referred to in No. 341. See Ep. Ind., Vol. X, p. 144, where Mr. Sewell points out that the details of the date (Makara, Purva 3, Friday, (Mrigasirsha) correspond to no regular date either in the reign of Jatavarman I (1251-64) or Jatavarman (1276-90), called the second by Mr. Sewell and third by Mr. Swamikannu Pillai.

346. 435 of 1907.—(Tamil) On the south wall of the shrines of the goddess Sivakami in the same temple. A damaged record of the Pandya king Maravarman alias Tribhuvanachakravartin Kulasekharadeva (I, 1208-1309), "who was pleased to take every country," dated third year. Seems to record a gift of land.

347. 436 of 1907.—(Tamil) On stones built into the mantapa in front of the same temple. A record of the Pandya king Maravarman alias Tribhuvanachakravartin Sundara-Pandya deva (I? 1216-35), "who was pleased to present the Chola country," in his tenth year. The stones are out of order.

348, 437 of 1907.—(Tamil) On the south wall of the Lakshminarayana Perumal temple in the same village. Records in the fifteenth year of the Pandya king Tribhuvanachakravartin Parakrima-Pandyadeva gift of money for a lamp.

349. 438 of 1907.—(Vatteluttu) On the same wall. Records gift of lamp to the temple of Triunaduvur-Pattalagar in Arikesarinallur. Mentions Vadavur in Ten-Parappu-nadu.

350. 439 of 1907.—(Tamil) On the west wall of the same temple. A record of the Chola king Parakesarivarman alias Sri-Rajendra-Chola deva (I. 1012-43 in his fifth year. Sale of land for a lamp to the shrine of Durgo-Paramesvariyar by the assemblies of three villages, viz., Arikesarinallur, Arapadasekharamangalam and Mandaragauravamangalam. It seems that the price of one makani of land was fifteen kasus.

351. 440 of 1907—(Tamil.) On the same wall. Records in the forty-Sixth year of the Pandya king Sadaiyamaran an agreement referring to a channel called Srikandavaykkal (It is not improbable that the king was the same as the donor of the Velvikudi grant who lived about A. D. 770.) See also Md. 22.

352. 441 of 1907- (Vatteluttu.) On the same wall. Records in the tenth year of the king Sadaiyamaran gift of gold

for a lamp to the temple of Tiunaduvu-Pattalagar in Arikesari-nallur, a bral madeya in Ala-nadu. (Was he the son of the king of the above epigraph and father of Varagunavarman who ascended the throne in A. D. 862?)

353. 442 of 1907 -(Tamil.) On the same wall. Records in the ninth year of the Pandya king Tribhuvanachakravartin Kulasekharadeva gift of fifty sheep for a lamp to the Naduvil-koyil at Tirupputtur (a hamlet of) Arikesarinallur, a brahma-deya in Ala-nadu.

354. 443 of 1907—(Vatteluttu) On the north wall of the same temple. An incomplete record of the Chola king Parake-sarivarman, dated thirty-sixth year. Records gift of a lamp. Mentions Arikesarinallur.

355. 444 of 1907—(Tamil.) On the same wall. A frag-ment of record, dated seocnd year (of a certain king).

356. 445 of 1907 (Tamil.) On the same wall. A fragment of record of the Pandya king Jatavarman alias Tribhuvanacha-kravartin Kulasekharadeva (I?) dated thirty-first year.

357. 446 of 1907—(Tamil.) On the same wall. Records in the eleventh year of the Pandya king Tribhuvanachakravar-tin Kulasekharadeva gift of a lamp. A few Vatteluttu letters are engraved on the right side of this inscription.

358. 447 of 1907.—(Vatteluttu) On the north wall of the Lakshminarayana-Perumal temple. Records in the ninth year of the Pandya king Sadaiyamaran gift of fifty sheep for a lamp by a certain Nagan Vikkiramadichchan. See No. 352 above.

359. 448 of 1907-(Tamil). On the same wall. A record of the Pandya king Tribhuvanachakravartin Kulasekharadeva recording in his ninth year gift of fifty sheep for a lamp.

360. 449 of 1907.—(Tamil). On the same wall. A dama-ged record of the Pandya king Maravarman alias Tribhuvanac-

chakravartin Sundara-Pandyadeva (1, 1216–35). 'Who was pleased to present the Chola Country', dated eleventh year.

361. 450 of 1907.—(Tamil.) On the same wall. Records in the second year of the Pandya king Jatavaram alias Tribhuvanachakravartin Kulasekharadeva (I or II?) a grant of land.

362. 451 of 1907.—(Tamil) On the north, west and south walls of the same temple. A record of the Pandya king Jatavarman alias Tribhuvanachakravartin Kulasekharadeva (I or II?) in his thirteenth year. The stones are out of order. One of them mentions the twenty-first year of some king.

363. 452 of 1907.—(Tamil.) On a stone built into the wall of the kitchen in the same temple. A damaged record of the Chola king Rajendra-Choladeva, dated fourth year. Mentions the assemblies of Arikesarinallur, Mandiragauravamangalam and Tiruppattur, which was apparently a hamlet of the other three. See No. 350 above.

364. 453 of 1907.—(Vatteluttu). On the Stone lying in front of the same temple. A fragmentary record.

365. 454 of 1907.—(Vatteluttu) On a pillar lying in the same place. A fragement of record. Seems to mention Tirupputtur.

366. C. P. No. 13 of 1907.—A record of the Pandya king (whose name is lost) in his eighteenth year. It is in sanskrit and Tamil. Opens with two verses in Sanskrit, of which the first contains an invocation to Vishnu and the second a prayer for the prosperity of the Pandya kings. Then follows a Tamil passage in the Vatteluttu alphabet describing in general terms the achievements of Pandyan kings. The first historical person is Jayanta Varman. His son was Arikesarin Maravarman, a friend of the Brahmans, performer of tulabhara, etc. His son (Name missing), who is called the remover of the Kali, age, fought a battle at Marudur. The last plate shows that the

object granted was land and the executor was one Tayan Singan, the Uttaramantrin of Kundur Kurram in Andanadu.

367. C. P. No. 14 of 1907.— "The larger Chinnamanur plates" Four plates in Sanskrit and three in Tamil. The historical part gives the genealogy of the early Pandyan dynasty from Arikesarin to Rajasimha II, Abhimanameru Maravaraman. In his eighteenth year he gave, while encamped in the village of Chulal in Rajasimhakulakil, the village of Narcheygai Puttur in Alanadu to a Brahman of the Kausikagotra. The Tamil portion gives more details of the same line of kings. Sec Ep. Rep. 1907 pp. 64 69, for a detailed discussion of the value and importance of this and the previous epigraph. See Pandyan genealogy.

---

SOURCE:- A Topographical List of the Inscriptions of the Madras Presidency Volume-2. (1919) Page No. 1032-1036)

— by: V. Rangacharya. M. A., L. T.

# உணவுத் துறையில்
# உன்னத உற்பத்தி

புதிய பொருளாதாரத் திட்டம் 1975 ஜூலை முதல் தேதியில் அறிவிக்கப்பட்டதிலிருந்து, நாடு உறுதியோடு முன்னேக்கிச் சென்றுள்ளது. நாம் கொண்ட சாதனைகள் :

- உணவுத் துறையில் என்றுமே இல்லாத புதிய சாதனை; உற்பத்தி 118 மில்லியன் டன்; கையிருப்பு 18 மில்லியன் டன்.

- 1976—77 முதல் 6 மாதங்களில் தொழில் உற்பத்தி 12 சதவீதம் கூடியது; இதே காலத்தில், கடந்த ஆண்டில் இவ்வளர்ச்சி 3 சதவிகிதமாகத்தான் இருந்தது.

- 1976-ன் முதல் 7 மாதங்களில் ஏற்றுமதி 33·9% கூடுதல் ஏற்றுமதி செய்து புதிய சாதனை நிகழ்த்தப் பட்டது.



DAVP 76/871

All kinds of types from Scootters to Tractor Tyres are retread most scientifically in our Modern Plant

OFFICE OF THE CURATOR
RECEIVED
20 ... 1977
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY

★

*FOR QUICKER AND DEPENDABLE RETREADING*

Contact :

# The Anamallais Retreading Corporation

42, MOUNT ROAD, : : GUINDY,
**MADRAS - 600032.**
Dial : 433286 - 433287 - 433288

ஆசிரியர், வெளியிடுபவர் : ச. பிரகதம், திருச்செங்கோடு
அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014